


# ஆகஸ்ட் 30 - புனித மிக்கேல் (1797-1863)

இவருடைய பெற்றோர் ஏழைகள் இவரே மூத்த மகன். இவர் சிறுவயதில் ஒரு குடியானவனின் ஆடுகளை மேய்த்து வந்தார். குருவாக விரும்புவதாக இவர் அடிக்கடி பெற்றோரிடம் தெரிவிப்பார். நாம் ஏழைகளாய் இருப்பதால் அது முடியாத காரியம் என்று அவர்கள் சொல்லுவார்கள். இந்த சமயத்தில் மிக்கேலுடைய பாட்டியும், பங்குத் தந்தையும் துணையாக வந்தார்கள். இவர் குருப்பட்டம் பெற்றபின் இரண்டு ஆண்டுகளாக ஒரு பங்கில் உழைத்தார். பின் குருமடத்தில் ஆசிரியராகவும் பின் தலைவராகவும் ஆனார். ஒரு புதிய சபையைத் தொடங்க இவருக்கு எண்ணம் வந்தது. பொதுத் தியானப் பிரசங்கம் செய்ய குருக்களுக்குப் பயிற்சி அளிப்பது அந்த சபையின் நோக்கம். சபையின் சட்ட திட்டங்களையும் இவர் தயாரித்தார். இவரை ஆதரித்து வந்த ஆயர் இறந்த பின் வந்த ஆயர் இவரை ஆதரிக்கவில்லை. சபையின் சட்டங்களை மாற்ற வேண்டுமென்று ஆயர் கூறியதற்கு நம் புனிதர் பணிந்தார். 25 ஆண்டுகளுக்குப் பின்னரே பாப்பானவர் இச்சபையை அங்கீகரித்தார்.

**சிந்தனை: நன்மை செய்ய முயல்கிறவர்களுக்கு எதிர்ப்பு வரத்தான் செய்யும். எதிர்ப்பைக் கண்டு மனம் மடியக்கூடாது.**

**செபம்: ஆண்டவரே, தலைவர்களுக்கு அனுதாப குணத்தைத் தாரும்.**